அளிப்பதில் மறுப்பு ஏதும் இல்லை. மைய அரசு மற்றும் இதர விதிமுறைகளின்படி தாயகம் திரும்பிய வாரிசுதாரர்களுக்கு வேலை வழங்கப்படுகிறது.

(ஆ) தாயகம் திரும்பியவர்களின் வாரிசுக்கு வேலை மறுக்கப்படுவதில்லை. எனவே கேள்வி எழவில்லை.

டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே கேள்வியைக் கேட்டு கடந்த வாரம் அதற்குப் பதிலாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் விரிவான ஒரு விளக்கத்தை அளித்திருந்தார்கள். அதில் இலங்கை அகதிகளின் வாரிசுகளுக்கு வாரிசு அடிப்படையில் ரப்பர் கழகத்தில் வேலை வழங்கப்படும்; அதற்கு ரேஷன் கார்டில் பெயர் உள்ளவர்களுக்கு வேலை வழங்கப்படும் என்று கூறினார்கள். ஆனால் பக்கத்து மாநிலத்திலிருந்து இங்கே வந்து அவர்கள் அகதிகள் என்று சொல்லிக் கொண்டு, அதில் வேலை கேட்பதினால் குழப்பம் ஏற்படுகிறது. எனவே ஏற்கெனவே கூறியதைப்போல அகதிகளின் வாரிசுகளுக்கு வேலை அளித்தமைக்கு நன்றிக்கூறி, அந்தப் பகுதியிலே இருக்கும் மற்றவர்களுக்கும் வேலை அளிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வாரம் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே இதே கேள்வியைக் கேட்டபோது அந்தக் குடும்பங்களுக்கு வேலை அளிக்கப்பட்டதாக அவர்கள் தெரிவித்தார்கள். தாயகம் திரும்பி வந்துள்ள 225 குடும்பங்களில் உள்ள வாரிசுதாரர்களுக்குத் தான் வேலை அளிக்கப்படுகின்றது. அதுவும் குடும்ப அட்டையில் பெயர் இல்லாதிருந்தால் அவர்கள் வாரிசுதாரர்களாக எடுத்துக்கொள்ளப் படுவதில்லை. வேலைவாய்ப்பும் அளிக்கப்படுவதும் இல்லை. எனவே குடும்ப அட்டையில் பெயர் இருக்கின்றவர்களுக்குத்தான் அவர்களை வாரிசுதாரர்களாக எடுத்துக்கொண்டு வேலை அளிக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 339, திரு. எஸ். எஸ். ராமசுப்பு, இருக்கையில் இல்லை. திரு. ஆர். முருகையா பாண்டியன், மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

339–

ஆலங்குளம் ஒன்றியத்தில் சீர்மரபினருக்கு இலவச வீடுகள் கட்டுதல்

20728-திரு. எஸ். எஸ். ராமசுப்பு:

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

1994 ஏப்ரல் 21]

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியத்தில் மிகவும் பின்தங்கிய பகுதிகளான தங்கம்மாள்புரம், மருதாத்தாள்புரம், சீவலசமுத்திரம் சீர்மரபினருக்கு இலவச வீடு கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர, பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியத்திலே, தங்கம்மாள்புரம், மருதாத்தாள்புரம், சீவலசமுத்திரம் போன்ற பகுதியிலே சீர்மரபினர் கிட்டத்தட்ட 20,000 பேர் அங்கே குடியிருந்து வருகின்றார்கள். அவர்களுக்கு விவசாயத்தைத் தவிர வேறு எந்தவிதமான வேலைவாய்ப்பு வசதியும் கிடையாது. ஏழைப்பட்ட அவர்களுக்கு வருங்காலத்திலாவது வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தை அரசு செயல்படுத்த முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை இதே கேள்வியை இந்த மன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர் எழுப்பியபோது நம்முடைய தாயுள்ளம் கொண்ட தமிழகத்தினுடைய முதலமைச்சர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், ரூ. 30 இலட்சம் செலவில் தாயுள்ளத்தோடு, 150 நரிக் குறவர்களுக்கு வீடுகள் கட்டுகின்ற வகையிலே உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளார்கள். அந்த அடிப்படையில், நரிக் குறவர்கள் நிலையாக அங்கே தங்கியிருந்து, அவர்களுக்கென்று அங்கே சொந்தமான இடம் இருந்து, அது அரசினுடைய கவனத்திற்கு வந்தால், படிப்படியாக நம்முடைய முதலமைச்சர் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவின் பேரிலே அவர்களுக்கு வீடுகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகுப் பேரவைத் தலைவர்: வினா எண் 340, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.